

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 8 | 08.03.2025 | மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் | பனையூர் பேருந்து நிலையம் | இந்திரகுமார் தேரடி, தெ.வர்ஷினி |
| 9 | 08.03.2025 | திருநெல்வேலி கிழக்கு | இராதாபுரம் | செட்டிகுளம் பேருந்து நிறுத்தம் அருகில் | மதுரை பாலா, சகாய பெபிளா |
| 10 | 08.03.2025 | சேலம் மத்திய | சேலம் வடக்கு | கோரிமேடு, அஸ்தம்பட்டி | வழக்கறிஞர் ஐ.பரந்தாமன் எம்.எல்.ஏ., செ.யோக ஸ்ரீ |
| 11 | 08.03.2025 | விருதுநகர் வடக்கு | சிவகாசி | ரிசர்வ் லைன், ஆனையூர் பஞ்சாயத்து, சிவகாசி | முனைவர் **இரா.தி.சபாபதி மோகன்,** பா.முனீஸ்வரி |
| 12 | 09.03.2025 | தூத்துக்குடி வடக்கு | தூத்துக்குடி | சிதம்பரம் நகர் பேருந்து நிலையம், பாளை சாலை | **பொன்.முத்துராமலிங்கம்,** சஞ்சய் |
| 13 | 09.03.2025 | சேலம் மத்திய | சேலம் தெற்கு | கொண்டலாம்பட்டி ரவுண்டானா | வழக்கறிஞர் சரவணன் அண்ணாதுரை, சூரியபிரகாஷ் |
| 14 | 09.03.2025 | விழுப்புரம் தெற்கு | திருக்கோவிலூர் | திருவெண்ணைநல்லூர் | மாண்புமிகு **கோவி.செழியன்,** ச.கீர்த்தனா |
| 15 | 10.03.2025 | சேலம் மத்திய | சேலம் மேற்கு | கோட்டக் கவுண்டம்பட்டி, ஓமலூர் | வழக்கறிஞர் சிவ.ஜெயராஜ், வெ.சரண்யா |
| 16 | 10.03.2025 | விழுப்புரம் மத்திய | விழுப்புரம் | கோலியனூர் | டான் அசோக், த.இன்பக்குமாரன் |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 04–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி






சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று (07.03.2025) வெள்ளிக்கிழமை, சென்னை – கௌரிவாக்கத்தில் உள்ள பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஷ்வரா ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ் கல்லூரியில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி, பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்லூரி பணியாற்றினார்களுக்கு நினைவு பரிசு வழங்கினார். திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. உடன், சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, கல்லூரி தலைவர் வாசுதேவன், துணைத் தலைவர்கள் பிரசன்னா வெங்கடேஷ், விஷ்னு கார்த்திக், கல்லூரி முதல்வர் கல்பனா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.





சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் இனமான பேராசிரியர் 5 வது நினைவு நாளை முன்னிட்டு அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு பேராசிரியர் மகன் அ.அறிவழகன், பெயரன் அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு அவர்கள் மலர் தூவி புகழ் அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து சாமிதாஸ்புரம் ஆஸ்பிரின் கார்டன் சந்திப்பில் 500 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. இப்புகழஞ்சலி நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், பி.கே.மூர்த்தி, தேவஜவகர் வே.வாசு. கூ.பீ.ஜெயின், ஐசிஎப்.வ.முரளிதரன், எ.நாகராஜன், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், எம்.சாமிக்கண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி. செ. தமிழ்வேந்தன். மற்றும் வானவில்விஜய், எல்.பி.எப்மோகன், ஜி.தாமோதரன், சுதாதீனதயாளன் எம்.சி, ராஜேஷ்வரிஸ்ரீதர் எம்.சி, எம். பெரோஸ்கான், ஜி.வி.நாகவள்ளி, ம.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜ்முகமது, து.ஆயிரம், ஆர்.எஸ்.சித்திக் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழகச் செயலாளர்கள் கழகத் தோழர்கள் ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தினர்.